முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1466

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.10.2023,** புதன்கிழமை

1. ஞான கீர்த்தியே அரங்கா வாழ்க
ஞான சித்தியே தேசிகா வாழ்க
தான தர்மத்தின் பலமே
தரணிகாக்க வந்த வரமே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 17 ம் நாள், 04.10.2023, புதன்கிழமை)
ஊழ்போக்கும் கலியின் சிறந்த ஞானி
உண்மை வழி காட்டும் மாதவசி நீ
3. தவசி உன் தக்க பாதை வழி
தரணியோர் பின்பற்றி ஞானம் பயின்றால்
பயின்றவர்க்கு ஞான சித்தி உறுதி
பழுதின்றி பிறவா பேறும் உறுதி அவர்கட்கு
4. அவனியிலே அரங்கன் காட்டும் மார்க்கமே
ஆறுமுகன் யான் காட்டும் மார்க்கமாகும்
அவனியோர் நம்பிக்கைக் கொண்டு வந்தால்
அகிலத்தில் ஞானிகள் ஆவது உறுதி
5. உறுதி தந்து அரங்கனுள் யானே
உங்களுக்கு ஞானம் அருளிவர
கருதிவந்து முழு சரணாகதி கொண்டு
கந்தனே அரங்கனே என முழங்கி அரங்கன் வழி தொடர
6. தொடருபவர்க்கு இனி பிறவாத பேறு
தண்டாயுதன் என்னருளால் வாய்க்கக்கூடும்
கூடவே அரங்கன் காட்டுகின்ற தர்மமே
குவலயத்தை பசிபிணி வாட்டமின்றி மீட்கும் உத்தம மார்க்கமாகும்

7. மார்க்கமதை உலகோர் ஏற்று
மண்ணுலகமெங்கும் கிளைச் சங்கங்களாக
ஆற்றல்பட உருவாக்கி தர்மத்தை அளவில்லா வளர்த்தால்
அந்த தர்மத்தின் வழியே உலகமாற்றம் நடக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—